ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/52 - 2022 ජනවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2022.01.15

*2262/52 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச் சீர்த்திருத்தச் சட்டத்தின் (விசேட ஏற்பாடு) மூலம் அடிக்கடி திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்த்திருத்தச் சட்டத்தின் 27அ(1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் காணி அமைச்சரான எஸ். எம். சந்திரசேன ஆகிய நான், இக் கட்டளையின் மூலம்,*

*(1)* *தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்த்திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு அச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் உரித்தாகும் இக் கட்டளையின் அட்டவணையின் மூலம் குறித்துரைக்கப்படும் விவசாய காணித்துண்டுகளை குறித்த காணிச் சீர்த்திருத்தச் சட்டத்தின் 22 (1) ஆஆ ஆம் பிரிவின் பிரகாரம் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை முதலீட்டுச் சபைக்கு விற்பனை செய்வதன் மூலம் வழங்கப்படுகின்றது.*

*(2)* *மேற் குறிப்பிடப்பட்ட விற்பனை தொடர்பில் ரூபா 61,000,000/= (அறுபத்தி ஒரு மில்லியன் ரூபா) தொகை பின்வரும் அட்டவணைப்படுத்தப்பட்ட காணி தொடர்பில் இலங்கை முதலீட்டுச் சபையினால் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டுள்ளது.*

| உப அட்டவணை | காணியின் பெயர் | வரைபட இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் ஏக்கர் ரூட் பேர்ச்சஸ் |
|---|---|---|---|---|
| இலக்கம் 01 | புன்னைக்குடா தோட்டம் | ஆரம்ப வரைபட இல மட/3067 | 1,4 | 55 01 05.9 |

**சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன,**
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, சனவரி 10.

1 ஆம் அட்டவணை - புன்னைக்குடா தோட்டம்

காணியின் விபரம் - கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் புன்னைக்குடா கிராமத்தில் அமைந்துள்ள புன்னைக்குடா தோட்டம் எனும் காணி விஷேட இல. மட/13 இன் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மாற்றப்பட்டுள்ளது. அரச நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2021.01.26 ஆந் திகதிய ஆரம்ப வரைபட மட/3067 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வரும் பெயர்களையும் விஸ்தீரணங்களையும் கொண்ட காணி துண்டுகள்.

01. துண்டு இல. 01
விஸ்தீரணம் - 39 ஏக்கர் 2 ரூட் 7.0 பேர்ச் (16.0025 ஹெக்டயார்)

வடக்கு : ஆரம்ப வரைபட இல. மட/3017 துண்டு இலக்கம் 1 மற்றும் தளவாய்க்காடு காணி;
கிழக்கு : தளவாய்க்காடு காணி;
தெற்கு : தளவாய்க்காடு காணி மற்றும் துண்டு இல. 2;
மேற்கு : ஆரம்ப வரைபட இல. மட/3017 துண்டு இலக்கம் 1, 2 மற்றும் 3.

02. துண்டு இல. 04
விஸ்தீரணம் - 15 ஏக்கர் 2 ரூட் 38.9 பேர்ச் (06.3709 ஹெக்டயார்)

வடக்கு : ஆரம்ப வரைபட இல. மட/3017 துண்டு இலக்கங்கள் 3, 4 மற்றும் 6;
கிழக்கு : துண்டு இலக்கம் 3 மற்றும் தளவாய்க்காடு காணி;
தெற்கு : பிரதேசவியல் வரைபட இலக்கம் 298482 மற்றும் 174579 இல் துண்டு இல. 5 மற்றும் தளவாய்க்காடு காணி;
மேற்கு : பிரதேசவியல் வரைபட இலக்கம் 298482 மற்றும் 174579 இல் துண்டு இல. 5 மற்றும் ஆரம்ப வரைபட இல. மட/3017 இல் துண்டு இல. 6 மற்றும் தளவாய்க்காடு காணி.

EOG 01 - 0157